(2) செய்தி.—மண்டல அளவில் அவர் ஒரு சிறிய தகவல் நிலையத்தை அமைத்துக்கொண்டு அங்கிருந்து, அரசின் திட்டங்களைப் பற்றிய எல்லா விவரங்களையும் அவர் வழங்குவார். மாவட்ட ஆட்சித் தலைவரை கலந்துகொண்டு தன்னுடைய மண்டலத்திற்குள் வரையறுக்கப்பட்ட அளவில் துண்டு வெளியீடுகளை வெளியிடுவார். மாவட்ட ஆட்சித் தலைவருக்காக செய்தி வெளியீடுகள் அவரால் வெளியிடப்படும். மாநில அளவில் துண்டு வெளியீடுகளை வெளியிடுவதற்கான விவரங்களை அவர் சேகரிப்பார்.

(3) சுற்றுலா.—ஒவ்வொரு மண்டலத்திலும் சுற்றுலாவிற்கான இடங்கள் இருக்கின்றன. இந்த அலுவலர் சுற்றுலாவிற்கு பொறுப்பாக இருப்பதுடன், உள்நாட்டு சுற்றுலா வளர்ச்சிக்கான எல்லா நடவடிக்கைகளும் எடுப்பார்.

(4) வருகை.—ஒரு மண்டலத்திலுள்ள மாவட்டங்களுக்கு வி.ஐ.பி. எனப்படும் மிக முக்கியமானவர்கள் வருகை தருகின்ற போது அவர்களையும் அரசையும் இணைக்கின்ற ஒரு இணைப்பு அலுவலராக பணியாற்றுவார்.

(5) கண்காட்சி.—இந்த அலுவலர் ஒரு சிறிய கண்காட்சி பிரிவை வைத்துக்கொண்டு மண்டல அளவில் கண்காட்சிகளை நடத்துவார்.

(6) சாதனங்களை விநியோகித்தல்.—தலைமை அலுவலகத்திலிருந்து அனுப்பப்படும் விளம்பரச் சாதனங்களை மண்டலத்திற்குள் மண்டல மக்கள் தொடர்பு அலுவலர் விநியோகிப்பார்.

(7) ஒருங்கிணைப்பு.—மத்திய, மாநில அரசுகளின் அலுவலர்களின் விளம்பரப் பணிகளை மண்டல மக்கள் தொடர்பு அலுவலர் ஒருங்கிணைப்பு செய்வார்.

(8) திரைப்படங்கள்.—செய்தித் துறையில் திரைப்படப் பிரிவு ஒன்றினை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அஃது மாநில மட்டத்தில் திரைப்படங்களை தயாரித்து, மண்டலத்தின் பல மாவட்டங்களில் உள்ள திரை அரங்குகளில் திரையிட அனுப்பும். மாவட்டங்களில் பகிர்ந்தளிப்பதையும் திரைப்படுவதையும் மண்டல தொடர்பு அலுவலர்கள் கவனித்துக் கொள்வார்கள். புகைப்படம் எடுப்பவர்கள், திரைப்படம் எடுப்பவர்கள் அவரது மண்டலத்திற்கு வரும்போது அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வார்.

(9) செய்தி இதழ்.—ஒவ்வொரு மாவட்டத்திலும் செய்தி நாளிதழ்களும், வார ஏடுகளும் வெளிவருகின்றன. அந்த அலுவலர் மண்டல அளவில் செய்தி இதழ் தொடர்பு அலுவலராக பணியாற்றுவார்.

(10) பிரச்சாரங்கள், விழாக்கள், மற்றும் அரசின் நிகழ்ச்சிகள் இவைகளை நடத்திட மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், மாவட்ட அலுவலர்களுக்கும் மண்டல மக்கள் தொடர்பு அலுவலர் உதவி செய்வார்

1971 ஜூலை 26]

## இணைப்பு 3.

[525-ம் பக்கத்தில் 439-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

On 21st April 1971, some workers belonging to Thiru Gurumurthi's Union (T.N.C.C.) and Thiru Prathapachandran's Union (D.M.K.) of Simpson Company had a wordy quarrel. As a result of this, some workers of the T.N.C.C. Labour Wing formed themselves into an unlawful assembly and attacked the workers of the D.M.K. Union at Pumping Station Road. A case and a counter case were registered in the Chintadripet Police Station against the workers involved in the incident. Two persons were admitted as in-patients in General Hospital for treatment. Three others of Thiru Gurumurthi's Group with simple injuries were treated as out-patients. A third case was also registered in Chintadripet Police Station against Thiru Prathapachandran and some others. Five persons were taken into custody.

2. As a sequel to the above incident, some workers of Addison and Company, Sembium (Thiru Gurumurthi's Group) resorted to alightning strike on 21st April 1971. Further, following a clash between the rival Unions, i.e.., T.N.C.C. and D.M.K. at 16-00 hours on 22nd April 1971, the D.M.K. workers started in a procession and dispersed at Perambur. On 23rd April 1971 (holiday) the workers of the D.M.K. Union went in procession to the Labour Commissioner's Office at Chepauk and presented a memorandum demanding full wages for 23rd April 1971 and thereaftre proceeded to the State Guest House to present a memorandum to the State Education Minister. On being advised to meet the State Education Minister later, they dispersed.

24—4—1971-ல் சிம்சன் கம்பெனியைச் சேர்ந்த திரு. குருமூர்த்தி அவர்களின் தொழிற்சங்கத் (டி.என்.சி.சி.) தொழிலாளர் சிலருக்கும் திரு. பிரதாபசந்திரன் அவர்களின் தொழிற்சங்கத் (தி.மு.க.) தொழிலாளர் சிலருக்குமிடையே வாய்ச்சண்டை ஏற்பட்டது. இதன் விளைவாக தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தொழிலாளர் பிரிவினர் சிலர் சட்டத்திற்குப் புறம்பான முறையில் ஒரு கூட்டமாகக் கூடி பம்ப்பிங் ஸ்டேஷன் சாலையில் தி.மு.க. தொழிற்சங்கத் தொழிலாளர்களைத் தாக்கினர். இந்நிகழ்ச்சிக்குத் தொடர்புடைய தொழிலாளர்கள் மீது ஒரு வழக்கும், ஒரு எதிர் வழக்கும் சிந்தாதிரிப்பேட்டைக் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டன. இருவர் அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதற்காக அகப் பிணியாளர்களாய்ச் சேர்க்கப்பட்டனர். குருமூர்த்தி குழுவைச் சேர்ந்த பிற மூவர், சிறு காயங்களுடன் அம்மருத்துவமனைக்குச் சென்று புறப் பிணியாளர்களாய்ச் சிகிச்சை பெற்று வந்தனர். திரு. பிரதாப சந்திரன் மீதும் வேறு சிலர் மீதும் மூன்றாவது வழக்கு ஒன்றும் சிந்தாதிரிப்பேட்டைக் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது. ஐவர் சிறைக் காவலில் வைக்கப்பட்டனர்.

2. மேற்கண்ட நிகழ்ச்சியின் விளைவாக செம்பியம் அடிசன் நிறுவனத் தொழிலாளர்கள் (குருமூர்த்தி குழுவினர்) 21—4—1971-ல் திடீரென வேலை நிறுத்தம் செய்தனர். மற்றும் 22—4—1971 மாலை 4 மணியளவில் போட்டித் தொழிற்சங்கங்களான தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தி.மு.க. தொழிற்சங்கங்களிடையே மோதல் நடந்த பின், தி.மு.க. தொழிலாளர்கள் ஊர்வலமாகச் சென்று பெரம்பூரில் கலைந்தனர். விடுமுறை நாளான 23—4—1971-ல் தி.மு.க. தொழிலாளர்கள் சேப்பாக்கத்திலுள்ள தொழில் ஆணையாளர் அலுவலகத்திற்கு ஊர்வலமாகச் சென்று, 23—4—1971-க்கு முழு ஊதியம் வழங்கப்படவேண்டுமெனக் கோரும் மனு ஒன்றினை அளித்தனர். அதன் பிறகு கல்வியமைச்சரிடம் மனு ஒன்றை அளிப்பதற்காக அவர்கள் மாநில விருந்தினர் மாளிகைக்குச் சென்றனர். கல்வியமைச்சரைப் பின்னர் சந்திக்குமாறு கூறப்பட்டதற்கிணங்க அவர்கள் கலைந்து சென்றனர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS